தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 15/– மலர் 20 - இதழ் 03 – ஜூலை 2018 | Price : Rs. 15/- Vol : 20 - Issue : 03 - 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு

விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ஆய்வு

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

அன்பார்ந்த சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் சார்ந்த சகோதரிகளே! வணக்கம்.

கடந்த சுமார் 30 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் ஒவ்வொரு உறுப்பினரின் குடும்பத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பது ஒரு "சமூகப் புரட்சி" எனலாம். சுய உதவிக் குழுக்களைத் தொடர்ந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும் இணைந்து கிராம அளவில் பல்வேறு முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. இச்சமூகப் புரட்சியின் அடுத்த படிநிலையாக கிராமங்களில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களின் முன்னேற்றத்திற்கும் அக்கறை செலுத்துவதன் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வரின் "வறுமை இல்லா தமிழகம்" எனும் கனவை எட்ட முடியும்.

தமிழக அரசு இளைஞர்களின் முன்னேற்றத்திற்கும், வேலை வாய்ப்பிற்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நடப்பு ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு 71 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கிட மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டில் தமிழக அரசு 25,000 ஊரகப் பகுதி இளைஞர்களுக்கு "தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY)" எனும் திறன் வளர்ப்பு திட்டம் மூலமாகவும், 12,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலமாகவும் வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டு, பணியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட அளவில் 59 வேலைவாய்ப்பு முகாம்களும், ஒன்றிய அளவில் 385 முகாம்களும் நடத்தப்பட்டு, அம்முகாம்களின் வாயிலாக 34,000 இளைஞர்களுக்கு பல்வேறு முன்னணி நிறுவனங்களில் பணி அமர்வு பெற்று தர திட்டமிடப்பட்டுள்ளது.

'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY)" என்பது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயது வரையிலான கிராமப்புறத்தைச் சார்ந்த ஆண் பெண் இருபால் இளைஞர்களுக்கும் 3 மாத காலம் முதல் ஓராண்டு வரையிலான பல்வேறு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பெண்கள், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தோர், மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் போன்ற பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 45 வரை தளர்த்தப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான பயிற்சிக் கட்டணம், போக்குவரத்துச் செலவுகள், தங்குமிட வசதி செலவுகள், கல்வி உபகரணங்கள் உட்பட அனைத்து செலவினங்களையும் 100% இலவசமாக DDU GKY திட்டம் ஏற்றுக் கொள்வதுடன் பயிற்சிக்குப் பின் கணிசமான ஊதியத்துடன் வேலைவாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

இத்தகைய சிறப்பம்சம் கொண்ட DDU GKY திட்டம் குறித்து இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு சுய உதவிக் குழு / வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வாராந்திர / மாதாந்திரக் கூட்டங்களில் ஒரு விவாதப் பொருளாக வைத்து விவாதித்து, தகுதி வாய்ந்த, வேலை வாய்ப்பு தேடும் இளைஞர்களை கண்டறிந்து பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இதற்கென தயாரிக்கப்பட்டுள்ள திறன் வளர்ப்புப் பயிற்சி உறுதிமொழியை ஒவ்வொரு சுய உதவிக் குழு / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கூட்டங்களிலும் மேற்கொண்டு இவ்வுறுதிமொழியை உங்கள் கூட்டத் தீர்மானப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

மேலும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள "கௌசல் பஞ்சி" (Kauvsal Panjee) எனும் மொபைல் செயலி மூலம் உங்கள் பகுதிக்கான சமூக களப் பகுதி வழிநடத்துனர் (CF) மற்றும் திறன் வளர்ப்புப் சமூக வல்லுனர் (Job CP) உதவியுடன் அனைத்துத் தகுதி வாய்ந்த இளைஞர்களையும் பதிவு செய்ய உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வரும் ஆண்டிலிருந்து சிறந்த மகளிர் சுய உதவிக் குழு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்காக வழங்கப்படும் மாவட்ட / மாநில அளவிலான விருதுக்கான தேர்வுக் காரணிகளில் இளைஞர் திறன் வளர்ப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் கணக்கில் கொள்ள தீர்மானித்துள்ளோம்.

எனவே, அனைத்து சுய உதவிக் குழு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களும் இச்சீரிய முயற்சியில் தங்களை ஈடுபடுத்தி, தமிழகத்தில் "வேலையற்ற இளைஞர்களே இல்லை" எனும் நிலையை எட்ட உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தின கொண்டாட்டம் 09

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் விழா 05

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

மழை நீரை சேகரிப்போம் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கிடுவோம் 13

கோதுமை ரவை பருப்பு சாதம் 14

மீனவர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் 32

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், பெண்களுக்கு பயனுள்ள செய்திகள், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள், பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் போன்றவற்றை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழிற்கு எங்களின் வாழ்த்துகள்.

திருமதி. வெண்ணிலா ராஜசேகரன்,
சிலம்பு மகளிர் சுய உதவிக் குழு,
சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம்

திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், கிராமங்களில் சுகாதாரம் குறித்தும், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைப்பது குறித்தும், தமிழகத்தை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாநிலமாக மாற்றும் 'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' குறித்த செய்திகள் சிறப்பாக உள்ளன.

திருமதி. சந்திரா கருணாகரன்,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அரசு வழங்கி வரும் நலத்திட்ட உதவிகள், சட்ட மன்றக் கூட்டத் தொடரில் அறிவித்துள்ள அறிவிப்புகள், பயனுள்ள குறிப்புகள், வெற்றிக் கதைகள், தலைமை நிலைய செய்திகள், மாவட்ட செய்திகள் போன்றவை முற்றத்தில் சிறப்பாக வெளியிடப்படுகின்றன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
உடையாப்பட்டி ஊராட்சி கூட்டமைப்பு,
உடையாப்பட்டி, சேலம் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக கடற்கரைப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த கட்டுரைகள் எங்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
முத்துச் சிப்பி மகளிர் குழு,
கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 20 – இதழ் 03 – ஜூலை 2018 – விலை ரூ. 15/–

■ கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

■ நிர்வாக ஆசிரியர்கள்
ஜா. ஆனி மேரி சுவர்ணா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

எஸ். ஜானகி,
டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கா. முத்து மீனாள், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

■ பொறுப்பாசிரியர்
சு, மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

■ துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

■ முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

■ பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

■ கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

ஆடி... ஓர் வசந்த காலம்...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

பருவ காலங்களை பல வகையாகப் பிரிக்கின்றோம். கோடைக்காலம், மழைக் காலம், முன்பனிக் காலம், இலையுதிர் காலம், இளவேனிற்காலம், வசந்த காலம் என பல காலங்கள் ஒவ்வொரு ஆண்டும் வந்து செல்கின்றன. மேற்கத்திய நாடுகளில் வசந்த காலத்தை அங்குள்ள மக்கள் ஆர்வத்தோடு வரவேற்பார்கள். காரணம், நிலத்தை மூடி கிடக்கும் பனிக்கட்டிகள் உருகி மரங்கள் மற்றும் செடி கொடிகள் துளிர்விட ஆரம்பித்து, எங்கு நோக்கினாலும் பச்சை பசேலென்று காட்சியளிக்கும், பார்ப்பவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியும், மனதிற்கு மகிழ்ச்சியும், அனைவருக்கும் இனம் புரியாத ஒரு எழுச்சியும் ஏற்படும். நமது நாட்டில் வசந்த காலம் எது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாவிட்டாலும், ஆடி மாதத்தை வசந்தகாலம் என எடுத்துக் கொள்ளலாம்.

இளவேனிற்காலம் முடிந்து பருவ மழையின் தொடக்கத்தில் ஆடி மாதம் ஆரம்பிப்பதால் காய்ந்து கிடந்த மரங்கள், செடி, கொடிகள், புல்வெளிகள் ஆகியவைகளில் பசுமை துளிர் விடுவதையும், வயல்களில் நாற்று விடுவது, விதை விதைப்பது போன்ற விவசாய வேலைகளில் மக்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவதையும் பார்ப்பதற்கு இதமாக உள்ளது. மரங்களை நடுவதற்கும், வீட்டுத் தோட்டங்களை அமைப்பதற்கும் பொருத்தமான இந்த ஆடி மாதத்தில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மரங்களை நடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காடுகளிலும், தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும், பொது நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் கல்விக் கூடங்கள் ஆகியவற்றில் உள்ள காலி இடங்களில், மரங்களை நடுவதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். மிக அதிகமாக உருவாக்கப்படும் இதுபோன்ற பசுமை படலங்கள்தான் அனைவருக்கும் உயிர் மூச்சாக விளங்கும் நீரை கொடுக்கின்ற மழை பொழிவிற்கு வழிவகுக்கின்றது. மழையை பெறுவதற்கான வழிமுறைதான் இந்த மரம் வளர்ப்பாகும்.

ஆடி மாதத்தில் ஆடிப் பெருக்கினை வெறுமனே விழாவாகவும், சடங்காகவும் மட்டுமே கொண்டாடாமல், வர இருக்கும் பருவ மழையினால் கிடைக்கும் நீரை சேமிப்பதற்கான தயாரிப்பில் ஈடுபட முயற்சிப்போம்.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற சுதந்திர நாளை கொண்டாடும் அனைவருக்கும் முற்றம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான ‘உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும்’ திட்டம், 24.02.2018 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா, திருச்செங்கோடு வேலுசாமி முதலியார் – சின்னம்மாள் திருமண மண்டபத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்களும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பொன் சரஸ்வதி அவர்களும் 344 பயனாளிகளுக்கு இருசக்கர வாகன மானியத்தினை வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஏ. சுந்தரவள்ளி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்களும், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் அவர்களும் கலந்து கொண்டு, 874 பயனாளிகளுக்கு இருசக்கர வாகன மானியத் தினை வழங்கி சிறப்பித்தனர்.

இவ்விழாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். குமார் அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் (பொ) திரு. எல். வின்சென்ட் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கடன் இணைப்புத் தொடர்பான சிறப்பு ஆய்வுக் கூட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களும் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் கடன் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 270 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த இலக்கினை எய்திட SHG Bank Linkage Performence month of July 2018-ஐ முன்னிட்டு அனைத்துத் தொகுப்பு களப் பணியாளர்களுக்கும் மற்றும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கும் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் தலைமையேற்று ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து உதவித் திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். ■

விருதுநகர் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் கூடுதல் தலைமைச் செயலர் ஆய்வு

தமிழகத்தின் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக இராமநாதபுரம் மற்றும் விருநுநகர் ஆகிய மாவட்டங்கள் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் அரசின் திட்டங்களை முழு வீச்சில் செயல்படுத்தி முன் மாதிரி மாவட்டங்களாக மாற்றிட அரசின் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக வளர்ச்சிப் பணிகள் குறித்த பணி ஆய்வுக் கூட்டம் தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 14.07.2018 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை அலுவலர் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அளவிலான பணிகளின் முன்னேற்றம் குறித்து விவரித்தார். தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் முதன்மை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினர்.

திறன் பயிற்சிகள் குறித்து கூடுதல் இயக்குனர் திரு. ஜே கணேஷ்கண்ணா அவர்கள், நிதி உள்ளாக்கம் குறித்து கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் குறித்து ஊரக வாழ்வாதார இயக்க ஆலோசகர் திரு. ராஜன்பாபு அவர்கள், வங்கியின் பங்குகள் குறித்து பாண்டியன் கிராம வங்கியின் தலைவர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

இந்த நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் அவர்கள், 11 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக ரூ. 30 இலட்சத்தினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுத் துறைகளின் முதல்நிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இரா. தெற்வேந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்வின் நிறைவாக விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குனர் திரு. சுரேஷ் அவர்கள் நன்றியுரை நல்கினார். ■

ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 10.07.2018 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பயிற்சிகள்) கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப.,அவர்கள், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. பா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், கண்காணிப்புப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் 16.06.2018 மற்றும் 17.06.2018 ஆகிய இரண்டு நாட்கள் கோடை விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், பல்வேறு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும், அம்மா இருசக்கர வாகனத்திற்கான மானியங்களையும் வழங்கினர்.

இவ்விழாவின் போது அனைத்து அரசுத் துறைகளின் சார்பில் சாதனை விளக்க அரங்குகளும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை அரங்கும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த அரங்கில் வைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் சுமார் ரூ. 6 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டன.

இந்த விழாவில் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்த சமய அறநிலையத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வா வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் (பொ) திரு. அ. இராமலிங்கம் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர், மாவட்ட வன அலுவலர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்

சேலம் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மாவட்ட அளவிலான இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் 23.06.2018 அன்று கொண்டலாம்பட்டி, சௌடேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேலம் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. பி. சக்திவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 68 தனியார் நிறுவனங்களும், வேலைவாய்ப்பு வேண்டி 975 இளைஞர்களும் கலந்து கொண்டனர். அவர்களில் 415 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி செய்வதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

அதேபோல் 07.07.2018 அன்று மேட்டூரில் அமைந்துள்ள பெரியார் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். செம்மலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் வேலை வாய்ப்பு வேண்டி ஏராளமான இளைஞர்களும், பணிவாய்ப்பு வழங்கும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளில் சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சா. செல்வக்குமார் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், களப்பகுதி வழிநடத்துநர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தின கொண்டாட்டம்

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் MSME-யின் பங்கு கணிச மான அளவில் உள்ளது. சமூக, பொருளாதார முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புகளை அளித்து, நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு MSME நிறுவனங்கள் பங்களித்து அமைதியை நிலைநாட்டுவதில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் பொதுச்சபை MSME நிறுவனங்களை அங்கீகரித்து மேலும் ஊக்கப்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 27ஆம் தேதி அன்று சர்வதேச MSME நாளாக அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழக அரசின் சார்பாக சென்னை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடி, MSME நிறுவனங்களின் உரிமை யாளர்களை அழைத்து பாராட்டி சிறப்பு செய்து, துறையின் முக்கியத்துவத்துவம் இளைஞர்களிடம் சென்றடைய வழிவகுக்கிறது.

இவ்வாண்டு 27.06.2018 அன்று சென்னை, அண்ணாசலையில் உள்ள தி ரெயின் ட்ரீ ஹோட்டலில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சர்வதேச MSME தினத்தைக் கொண்டாடியது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் முதன்மை செயலாளர் / இயக்குநர் திரு. வே. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் சர்வதேச MSME தின கொண்டாட்ட நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் MSME துறை செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குனகரத்தின் முதன்மை செயலாளர் / ஆணையர் திரு. ராஜேந்திர குமார், இ.ஆ.ப., அவர்கள், SIDCO தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் அறநிலையத் துறை ஆணையர் திரு. வி. பழநிக்குமார், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர். எம். பாஸ்கரன் அவர்கள், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சி. பாலசந்திரன் அவர்கள், NIFT-TEA திறன் மேம்பாட்டுத் துறை தலைவர் டாக்டர். சிவஞானம் அவர்கள், டான்சியா தலைவர் திரு. சி. பாபு அவர்கள் மற்றும் கல்வியாளர்கள், MSME பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், பல்துறை வல்லுநர்கள், மாணவர்கள், இளைஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகிளா கிஷான் சசக்திகரன் பரியோஜனா (MKSP) திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், 29.06.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில், மகளிர் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் – மகிளா கிஷான் சசக்திகரன் பரியோஜனா (MKSP), செயல்படுத்தப்பட்டு வரும் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய பகுதிகளை நேரில் பார்வையிட்டு, அப்பகுதியில் விவசாயம் மேற்கொண்டு வரும் மகளிர் விவசாயி மற்றும் சமுதாய வள ஒருங்கிணைப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடி, விவசாயம் குறித்த பல்வேறு விபரங்களைக் கேட்டறிந்ததுடன் மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து கூடுதல் இயக்குநர் அவர்கள், அப்பகுதியில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வரும் தேசிய வேளாண்மை நிறுவனத்தினர் (NAF), காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுடன் இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, இத்திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்திட உரிய ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் உடனிருந்தனர். ■

மகளிர் விற்பனை அங்காடி (Kiosk) திறப்பு விழா

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனத்தின் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் அங்காடியினை (Kiosk) 29.06.2018 அன்று பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி. எம். மாதவி அவர்கள் துவக்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. ஹேமா, திருமதி. மேரி, ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனத்தின் உதவி இயக்குநர்கள் திருமதி. மைதிலி, திருமதி. சாந்தி மற்றும் அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் திரு. எழில் அரசன் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

பணி நியமன ஆணை வழங்குதல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தேர்வு செய்யப்பட்டு, வாலாஜாபாத் வீரராகவன் கல்வியியல் அறக்கட்டளை நிறுவனத்தில் அழகுக்கலை மற்றும் தையல் பயிற்சி பெற்ற 60 நபர்களுக்கு, 04.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் பயிற்சி நிறைவு சான்றிதழ் மற்றும் கூடுவாஞ்சேரி இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகள் போன்றவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உதவித் திட்ட அலுவலர் திரு. ராமதாஸ், வீரராகவன் கல்வியியல் அறக்கட்டளை இயக்குநர் திரு. வி. அரிபாலாஜி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. சக்திவேல், இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

பெரம்பலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் (திறன் வளர்ப்பு) திரு. ஜா. சம்பத் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பாடாலூர் ஆயத்த ஆடை தயாரிப்பு தொழில் நிறுவனத்தையும் மற்றும் அந்நிறுவனத்தில் நடைபெறும் ஆயத்த ஆடைப் பயிற்சியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ஆலத்தூர் ஒன்றியம், தெரணி ஊராட்சியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் இ-சேவை மையம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அவற்றின் கணக்கு விபரங்களை ஆய்வு செய்த கூடுதல் முதன்மை செயல் அலுவலர் அவர்கள், அவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

பின்னர் வேப்பூர் ஒன்றியம், பெரிய வெண்மணி ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அழுத்தப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட சுடாத செங்கல் தயாரிக்கும் தொழில் நிறுவனத்தைப் பார்வையிட்டு, மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய கூடுதல் முதன்மை செயல் அலுவலர் அவர்கள், ஆய்வின் நிறைவாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்க தொகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான அலுவலக ஆய்வையும் மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, பெரம்பலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. தேவநாதன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. துர்காசெல்வி மற்றும் திரு. பெ. வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர். ■

தேசிய அளவிலான விருது பெற்ற சுய உதவிக் குழுவிற்கு பாராட்டு

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஒன்றியம், அணைக்கரைப்பட்டி ஊராட்சியில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக் குழு தேசிய அளவில் சிறந்த சுய உதவிக் குழுவாக தேர்வு செய்யப்பட்டு, 11.06.2018 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களும் பால் வியாபாரம் மற்றும் தென்னங்கீற்று முடைந்து விற்பனை செய்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். சுழல் நிதி, தொழில் கடன், நேரடி வங்கி இணைப்பு ஆகிய கடன்களைப் பெற்ற இக்குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் செலுத்தி வருகின்றனர்.

கல்வி, சுகாதாரம் மற்றும் டெங்கு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மாற்றுத் திறனாளி, ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களின் வாழ்வாதாரம் மேம்படச் செய்தல் ஆகியவற்றிற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

தேசிய அளவிலான சிறந்த குழுவாக தேர்வு செய்யப்பட்ட சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக்குழுவினர், 21.06.2018 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. க. லதா, இ.ஆ.ப., அவர்களை சந்தித்தனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக்குழுவினரைப் பாராட்டி மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்தினார்.

இந்நிகழ்வின் போது சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. க. அருண்மணி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், தொகுப்பு வழிநடத்துனர்கள் உடனிருந்தனர். ■

தேசிய அளவிலான சிறந்த சுய உதவிக் குழு

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், வேலூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு தேசிய அளவில் சிறந்த சுய உதவிக் குழுவாக தேர்வு செய்யப்பட்டு, 11.06.2018 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள 15 உறுப்பினர்களும் தவறாது சேமிப்பு மேற்கொண்டு வருவதுடன் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு தொழில் பயிற்சிகள் பெற்றுள்ளனர். சுழல் நிதி, தொழில் கடன், நேரடி வங்கி இணைப்பு என பெற்று இக்குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களை மேற்கோண்டு வருவதுடன், தாங்கள் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் செலுத்தி வருகின்றனர்.

மாவட்ட அளவில் மணிமேகலை விருது பெற்றுள்ள இக்குழுவானது, கடந்த 18 வருடங்களாக கல்வி, சுகாதாரம், மது ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு, பிளாஸ்டிக் ஒழிப்பு, தொற்றா நோய் கண்டறியும் முகாம் நடத்துதல் ஆகியவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும், ஆகியவற்றுக்காகவும், மாற்றுத் திறனாளி, ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களின் வாழ்வாதாரம் மேம்படவும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு தனது சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக தேசிய அளவிலான சிறந்த குழுவாக தேர்வு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளது. குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு முற்றத்தின் பாராட்டுகள். ■

வாழ்வில் முன்னேற்றம் தந்த மகளிர் திட்டம்

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், பெரம்பூர் ஊராட்சியில் வசித்து வரும் விஜயலட்சுமி மகளிர் திட்டம் மூலம் வாழ்வாதாரம் பெற்றுள்ளார். தனது வெற்றி குறித்து விஜயலட்சுமி கூறும் போது, 'மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது திருமணத்திற்குப் பின் எனது பிறந்த வீட்டிற்கே திரும்பி வரும் சூழல் ஏற்பட்டதால், என் தாயாரின் வருமானத்தில் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தேன்.

அச்சமயத்தில் எங்கள் பகுதியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைப்பதற்காக மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டு, அதில் என்னை ஏழை பிரிவில் சேர்த்தார்கள். 12ஆம் வகுப்பு வரை நான் படித்துள்ளதால் எனக்கு பொருளாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. சமுதாய வழிகாட்டி (Com) பயிற்சியும் பெற்றேன்.

இந்நிலையில் மகளிர் திட்டத்தின் மூலம் அழகுக் கலை பயிற்சி பெற்ற நான், சொந்த மாக அழகு நிலையம் வைக்க ஆசைப்பட்டேன். ஆனால் அதற்கான பொருட்கள் வாங்க என்னிடம் வசதி இல்லாததால், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ரூ. 20,000/- கடன் பெற்று அழகுக் கலைக்குத் தேவையான பொருட்களை வாங்கி தொழில் மேற்கொண்டு வந்ததுடன், கிடைத்த வருவாயில் கடனையும் திரும்பச் செலுத்தி விட்டேன். எனது பகுதியில் இருக்கும் களப்பகுதி ஒருங்கிணைப்பாளரின் ஆலோசனையின்படி, அழகு நிலையம் வைக்கத் தேவையான முதலீட்டிற்காக மாவட்ட தொழில் முனைவோர் மையத்தில் விண்ணப்பித்து, நேரடி கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு ரூ. 1 லட்சம் கடன் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டு, முதல் தவணையாக ரூ. 50 ஆயிரம் பெற்று தனது வீட்டின் அருகில் சிறிய அளவிலான கடை ஒன்றில் அழகு நிலையம் துவக்கியுள்ளேன். இதன் மூலம் மாதந்தோறும் ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது.

சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 30 நாட்கள் நடைபெற்ற மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சிக்கு, எங்களது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் என்னை அனுப்பி வைத்தனர். பயிற்சிக்குப் பின்னர் தற்போது நான் திருவாரூர் மாவட்டம் மட்டுமல்லாது பிற மாவட்டங்களுக்கும் சென்று மாடித் தோட்டம் அமைக்க பயிற்சி வழங்கி வருகிறேன்.

எனது வாழ்வில் வளம் ஏற்பட்டிட வழி அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார். ■

பெண்ணே...! தன்னம்பிக்கைக் கொள்...!

பெண்ணே!
துன்பங்களால் துவண்டு விடாதே!
உயர்வு பெறப் போகிறோம் என உறுதியாய் நம்பு உயர்ந்து விடுவாய்!

பெண்ணே!
சங்கடங்களை சகித்துக் கொண்டால் தான்
சாதிக்க முடியும்!
தாயை மதிப்பவனே மனைவியாலும் மதிக்கப்படுவான்!

இறைவா !
மலையளவு துன்பங்களைத் தா!
தாங்கிக் கொள்ளும் இதயத்தைக் கொடுத்தபின்!

வசந்தா கோவிந்தராஜன்,
டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் மகளிர் குழு,
கும்பகோணம் வட்டாரம், தஞ்சாவூர் மாவட்டம்.

மழை நீரை சேகரிப்போம்...! தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கிடுவோம்...!

மழை நீர் சேகரிப்பு என்பது மழை நீரைத் திரட்டி, ஒருங்கே குவித்து, சேமித்து வைப்பது ஆகும். மழை நீரைச் சேகரித்து பொதுமக்களின் தேவைகளுக்கு, கால்நடைகளுக்கு, நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்தலாம்.

சராசரியாக நிலத்தில் பெய்யும் மழையில் 40% நிலத்தின் மேல் ஓடி, கடலில் கலப்பதாகவும், 35% வெயிலில் ஆவியாவதாகவும், 14% பூமியால் உறிஞ்சப்படுவதாகவும், 10% மண்ணின் ஈரப்பதத்திற்கு உதவுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது பெருநகரங்களில் வீடுகள், கட்டிடங்கள் போன்றவை அருகருகே கட்டப்படுவதும், தவிர திறந்தவெளிகளையும் சிமெண்ட் தளங்கள் அமைத்தும். தார் சாலைகள் அமைத்தும் மூடி விடுவதால் இங்கு பெய்யும் மழை நீரில் 5% அளவிற்குக் கூட நிலத்தில் உறிஞ்சப்படுவதில்லை. கடலோர நகரங்களில் நிலத்தினுள் புகும் நீர் அளவு குறைந்து, ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் அதிகமாக எடுக்கப்படும் போது, கடல் நீர் நிலத்தடியில் கலந்து பயன்படுத்த இயலாத அளவிற்கு மாறி விடுகிறது. இதனை மழை நீர் சேகரிப்பு முறைகள் மூலம் தவிர்க்கலாம்.

மழைநீரை சேமிக்க சிறிய அளவு முதல் பெரிய அளவு வரை பல வகையான அமைப்புகளை உருவாக்கலாம்.வீடுகள் மற்றும் நிறுவனங்களின் கட்டிடங்களின் மேற் கூரைகளில் இருந்தும், இதற்காகத் தயார் செய்யப்பட்ட தரை வழியாகவும் சேகரிக்கப்படும் மழை நீரை குடிநீருக்கான முக்கியமான ஆதாரமாகப் பயன்படுத்தலாம். அமைப்பின் திட்ட அளவு, செயல் திறன், மழைப்பொழிவின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து மழை நீர் சேகரிப்பு வீதம் அமையும். உள்ளூரிலேயே கிடைக்கக் கூடிய விலை மலிவான மூலப் பொருட்களைக் கொண்டு எளிதாகக் கட்டமைக்கப்பட்டு, பெரும்பாலான வசிப்பிடங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடியது. கட்டிடங்களின் மேற்கூரைகளில் சேகரிக்கப்படும் மழை நீர், பெரும்பாலும் நல்ல தரமானதாகவும், அதிகமான அளவு தூய்மைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லாமலும் இருக்கிறது.

தரை வழி மழைநீர் வடிகால் அமைப்பு

தரை வழி வடிகால் அமைப்பு மழை நீரை தயார்படுத்தப்பட்ட வடிகால் பகுதி யிலிருந்து சேமிப்புப் பகுதிக்குக் கொண்டு செல்கிறது. முறைப்படி வடிவ மைக்கப்பட்டு கூடிய அளவு நீரைச் சேகரிப்பதன் மூலம். இது சிறிய அளவு மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

மேற்கூரை மழைநீர் வடிகால் அமைப்பு

இந்த வகையான அமைப்பில் மேற்கூரையில் விழும் மழை நீரை ஒருங்கே திருப்பி நீர்த்தாரைகள் மற்றும் குழாய்கள் மூலம் சேமிப்புப் பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகிறது. வறண்ட காலத்துக்குப் பிறகு பெய்யும் முதல் மழையின் நீரை சேகரிக்காமல் விட்டு விடுவது நல்லது. இதில் தூசி, பறவை எச்சம் போன்றவைகள் கலந்திருக்கலாம். மேற்கூரை நீர்த்தாரைகள் போதுமான சரிவுடனும், பெருமழையைத் தாங்கக் கூடிய அளவு பெரியதாகவும் அமைத்தால் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

கொசு உற்பத்தி, நீர் ஆவியாதல், நீர் மாசுபடுதல், பாசி வளர்ச்சி ஆகியவைகளைத் தடுக்கச் சேமிப்புத் தொட்டிகளை நன்றாக மூட வேண்டும். மழை நீர் சேகரிப்புத் திட்டம் நல்ல முறையில் செயல்படவும், தூய்மையாகவும் இருக்க அதற்கு வழக்கமான பராமரிப்பு மற்றும் தூய்மைப் பணிகளும் செய்ய வேண்டும்.

நிலத்தடி நீர் மட்டம் உயர...

நிலத்தடி நீர்மட்டம் உயர மழைநீர் சேகரிப்புத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நிலத்தடித் தொட்டி, கிணறு, தெப்பக்குளம் அல்லது குட்டைகளில் சேமிக்கப்படும் மழைநீர் தானாக நிலத்தடிக்கு உறிஞ்சிக் கொள்ளப்படுகிறது.

நகர்ப்புற பகுதிகளில் பயன்பாடு...

மழைநீர் சேகரிப்புத் திட்டம் நகர்ப்புறங்களில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் மற்றும் மழை நீர் வெள்ளத்தை மட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. சேமிக்கப்படும் மழைநீர் அன்றாட வீட்டு உபயோகத் தேவைகளுக்கும், கழிப்பறைகளிலும், சலவை மற்றும் குளியலுக்கும் பயன்படுத்தலாம். கடின நீர் உள்ள இடங்களில் மழை நீர் முக்கியத் தேவையாக உள்ளது. சேகரிக்கப்படும் மழை நீரை நன்றாகச் சுத்தி கரிக்கப்பட்ட பின்னரே குடிதண்ணீராகப் பயன்படுத்த வேண்டும்.

மழை நீர் சேகரிப்பின் நன்மைகள்

நிலத்தடி நீர் மட்டம் உயர்கிறது... நீர் பற்றாக்குறை குறைகிறது...

நீரின் கார அமில தன்மை சமன் செய்யப்படுகிறது...

விவசாய நிலங்களில் மண் அரிப்பைத் தடுக்கிறது...

நிலத்தடி நீரை மேலே கொண்டு வரும் செலவு குறைகிறது...

மண்ணின் ஈரத்தன்மை காப்பாற்றப்படுவதால் விவசாயம் தடையின்றி நடைபெற உதவுகிறது...

மழை நீர் சேகரிப்பு பகுதியின் அருகிலுள்ள மரங்கள் மிக விரைவில் வளர்கின்றன...

நகர்ப்புறங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் காத்து, சாலை போக்குவரத்தை தடையின்றி நடைபெற உதவுகிறது...

நகர்ப்புறங்களில் நிறைய இடங்களில் நீர் தேங்குவதை தடுத்து நோய்கள் பரவுவதை தடுக்கின்றது..

பாலைவனப் பகுதிகள், தீவுகளில் மழை நீர் சேமிப்பு குடிநீருக்கு நல்ல ஆதாரம்...

குறைந்த செலவில் எளிய பராமரிப்பில் கிடைக்கும் நீராதாரம். ■



கோதுமை ரவை பருப்பு சாதம்

சர்க்கரை நோயாளிகளுக்கு கோதுமை ரவை மிகவும் நல்லது. கோதுமை ரவை காய்கறிகள் சேர்த்து பருப்பு சாதம் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

தேவையான பொருட்கள்

கோதுமை ரவை (பெரியது) – 1 கப், கடலைப் பருப்பு – அரை கப், வாழைக்காய் – 1, கத்தரிக்காய் – 2, பீன்ஸ் – 10, பெரிய வெங்காயம் – 1, கேரட் – 1, பச்சைப் பட்டாணி – கால் கப், உப்பு – தேவைக்கேற்ப, சாம்பார் பொடி – 3 தேக்கரண்டி, மஞ்சள் தூள் – கால் தேக்கரண்டி, கடுகு – கால் தேக்கரண்டி, வெந்தயம் – 1 தேக்கரண்டி, எண்ணெய் – 2 தேக்கரண்டி, கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை, புளித் தண்ணீர் – சிறித

செய்முறை

கோதுமை ரவையுடன் 2 கப் தண்ணீரும், பருப்புடன் 1 கப் தண்ணீரும் சேர்த்து குக்கரில் தனித்தனியே வேக விடவும். காய்கறிகளை நீள வாக்கில் வெட்டிக் கொள்ளவும். கொத்தமல்லியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். கேரட், பீன்ஸ், பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும். எண்ணெயை சூடாக்கி, கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை ஆகியவற்றை தாளித்த பின்னர், வெங்காயத்தை சேர்த்து வதக்கவும். வெங்காயம் சிறிது வதங்கியபின், கத்தரிக்காய், வாழைக்காய் ஆகியவற்றை சேர்த்து 5 நிமிடம் வதக்கவும். அடுத்து அதில் புளித்தண்ணீர் சேர்த்து மேலும் சில நிமிடம் வதக்கவும். பின்னர் அதில் வேக வைத்த காய்கறிகள், மஞ்சள் தூள், சாம்பார் தூள் ஆகியவற்றை சேர்த்து கலக்கி, 5 நிமிடம் வேக விட்டு, ஏற்கனவே வேக வைத்த கோதுமை ரவை, பருப்பு ஆகியவற்றை சேர்த்து கலக்கவும். கடைசியாக கொத்துமல்லி இலை தூவி பரிமாறவும்.

சுவையும் சத்தும் நிறைந்த கோதுமை ரவை பருப்பு சாதத்தை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். ■

மழைக்கால நோய்களை தடுக்கும் முறைகள்

கோடை வெயில் முடிந்து தற்போது ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனிடையே மழைக்கால நோய்களும் மக்களைத் தாக்கத் தொடங்கிவிடும். கொசுக்களால்தான் அதிகளவு நோய்கள் ஏற்படுகின்றன. சுகாதாரமாக இருந்தால் இப்பிரச்சனையைத் தவிர்க்கலாம். ஆனால் நோய் வந்து விட்ட பிறகு என்ன செய்வது என்பதைப் பார்ப்போம்.

டெங்கு

இந்தக் காய்ச்சலும் கொசுக்களால் ஏற்படுவதுதான், இக்காய்ச்சல் வந்தால் உடல் வலி, மூட்டு வலி மற்றும் தடிப்புகள் போன்றவை உண்டாகும். நோய் வருவதற்கான முக்கிய காரணம் டைகர் கொசுக்கள்தான். இந்தக் கொசுக்கள் வராமல் தடுப்பதற்கு பூச்சி விலக்கிகளைப் பயன்படுத்த வேண்டும்.

டைபாய்டு

டைபாய்டு என்ற நோய், தண்ணீரினால் வருவதாகும். டைபாய்டு வரக் காரணமாக இருப்பது எஸ்டைஃபி என்ற பாக்டீரியா, அசுத்தமான உணவு மற்றும் தண்ணீரை உபயோகிப்பதால் இந்நோய் ஏற்படுகிறது. மேலும் சுகாதார சீர்கேடினாலும் உருவாகும். காய்ச்சல், தலைவலி, சோர்வு, வலி மற்றும் தொண்டைப்புண் ஆகிய அறிகுறிகள் டைபாய்டிற்கான அறிகுறிகள்.

வயிற்றுப் போக்கு

மழைக்காலத்தில் எளிதில் தாக்கும் நோய்களில் வயிற்றுப் போக்கும் ஒன்றாகும். வயிற்றுப் போக்கும் ஏற்படும் போது, உடலில் உள்ள நீர்ச்சத்து அதிக அளவில் வெளியேறும். இதன் காரணமாக நடக்க முடியாமை, உடல் சோர்வு போன்றவை ஏற்படும். இந்நோய் ஏற்பட்டால் காலதாமதமின்றி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெறுவது அவசியம். வயிற்றுப் போக்கு பெரும்பாலும் சுகாதாரமற்ற உணவு மற்றும் தண்ணீரால் ஏற்படுகிறது. வயிற்றுப் போக்கில் அக்யூட் டையரியா மற்றும் குரோனிக் டையரியா என இரண்டு வகை உள்ளன. வயிற்றுப் போக்கை வரும் முன் தடுக்க முதலில் சுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்னர் கைகளைக் கழுவ வேண்டும். வெந்நீரைக் குடிப்பது நல்லது.

மஞ்சள் காமாலை

மஞ்சள் காமாலையை ஏற்படுத்தும் கிருமிகள் சுத்தமில்லாத உணவுகள் மற்றும் தண்ணீரின் மூலம் வருகிறது. சோர்வு, மஞ்சள் நிற சிறுநீர், வாந்தி மற்றும் ஈரல் செயல் பிறழ்ச்சி போன்றவை மஞ்சள் காமாலையின் அறிகுறிகள். இந்நோயைத் தடுக்க கொதிக்க வைத்த தண்ணீரைக் குடிக்க வேண்டும். சத்தான பானங்களை அதிகம் குடிக்க வேண்டும்.

வைரஸ் காய்ச்சல்

இவ்வகைக் காய்ச்சல் அனைத்து காலங்களிலும் உருவாகும். மிதமான முதல் அதிகமான காய்ச்சல்தான் இந்நோய்க்கு அறிகுறி. இக்காய்ச்சல் தொடர்ந்து 37 நாட்கள் வரை நீடிக்கும். மேலும் இதனுடன் சளியும், இருமலும் சேர்ந்து இருக்கும். நிலவேம்பு பொடியுடன் தண்ணீர் சேர்த்து காய்ச்சி, பனங்கற்கண்டு சேர்த்து, கொதிக்க வைத்து, வடிகட்டி அந்த நீரைக் குடித்து வந்தால் வைரஸ் காய்ச்சலை தடுக்கலாம்.

மழைக்கால நோய்களை தவிர்க்க தண்ணீர் தொட்டிகளை சுத்தப்படுத்த வேண்டும். கொசுக்களை அழிக்கும் மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். கொதிக்க வைத்து ஆறிய தண்ணீர் மற்றும் சத்தான பானங்களைக் குடிக்க வேண்டும். ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

அங்கன்வாடி குழந்தைகளுக்கான ஊட்டச் சத்து குறித்து மாநில அளவிலான ஒருநாள் கருத்தரங்கு



அங்கன்வாடி குழந்தைகளுக்கான ஊட்டச் சத்து மற்றும் போஷான் (POSHAN) அபியான் திட்டம் குறித்து மாநில அளவிலான ஒருநாள் கருத்தரங்கு 18.06.2018 அன்று சென்னையில் நடைபெற்றது. சமூக நலத்துறையின் முதன்மைச் செயலாளர் Dr. K. மணிவாசன், இ.ஆ.ப., அவர்களும், மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் இணைச்செயலாளர் Dr. ராஜேஷ்குமார், இ.ஆ.ப., அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி. A. சுகந்தி, இ.ஆ.ப., அவர்களும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. கண்ணன், இ.ஆ.ப., அவர்களும், ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர் திரு. இலட்சுமிபதி அவர்களும் மற்றும் மாவட்ட அளவிலான குழந்தைகள் வளர்ப்புத் திட்டத்தின் திட்ட இயக்குநர்கள் மற்றும் பிற அலுவலர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

அங்கன்வாடி குழந்தைகளின் தற்போதைய ஊட்டச்சத்து நிலை, ஊட்டச்சத்து இன்மையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் குழந்தைகள் ஊட்டச்சத்து முன்னேற்றத்தில் பிற துறைகளின் பங்கேற்பு ஆகியன குறித்து இந்த ஒருநாள் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன.

அங்கன்வாடி பணியாளர்கள் தங்கள் அன்றாட பணியில் குழந்தைகள், தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் ஆகியோரை சந்திக்கின்றனர். இவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதில் சுகாதாரப் பழக்க வழக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் கழிப்பறை பயன்பாட்டை இவர்களுக்கு உணர்த்துவதிலும் அங்கன்வாடி பணியாளர்கள் முக்கிய பங்கு வகிப்பது குறித்தும் கருத்துகள் பரிமாறப்பட்டன. ■

சுகாதாரச் செய்திகள்

இரு உறிஞ்சுக் குழி கழிப்பறை பயன்படுத்தினால் ஆண்டுக்கு ரூ. 50,000/- வரை சேமிக்கலாம்.

யுனிசெஃப் நிறுவனம் நடத்திய ஆய்வின்படி திறந்தவெளி மலம் கழித்தலற்ற பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் ஆண்டொன்றுக்கு ரூ. 50,000/- வரை சேமிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறது.

மருத்துவ செலவு தவிர்த்தல், உயிர் இழப்பைத் தவிர்த்தல் மற்றும் உடைமைகளின் சேதாரம் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் இந்த சேமிப்பு சாத்தியமாகிறது எனவும் இந்த ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

பிளாஸ்டிக் பொருட்கள் எவ்வாறு மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றன?

பாலிதீன் பைகள், குவளைகள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களில் பாலிஎத்திலீன் டெரெப்தாலேட் (Polyethylene Terephthalate), தாலேட் (Pthalate), பிஸ்பெனால்-அ (Bisphenol A), கன உலோகங்களான ஈயம் (Lead), பாதரசம் (Mercury), காட்மியம், ஆன்டிமணி போன்றவை உள்ளன. குப்பிகளில், பிளாஸ்டிக் பைகளில் தண்ணீர், குளிர்பானங்கள், சூடான தேநீர், காபி முதலியவற்றை அருந்தும் போது மனித உடலில் உட்கிரகிக்கப்பட்டு, உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ■



மணி ஆற்றங்கரைக்குச் சென்று, காலைக்கடன்களை முடித்துவிட்டு வரும்போது மணி ஏழரையைத் தாண்டிவிட்டிருந்தது.
எட்டேகாலுக்குள்ள போகலேன்னா, கேட்டைப் பூட்டிடுவாங்களே!
மனம் திருந்திய மணி
வேகவேகமாய் நடந்து வீட்டை நெருங்கியபோது அவன் நண்பன் சுந்தர், பள்ளிக்குக் கிளம்பியிருந்தான்.
என்ன மணி... இன்னிக்கும் லேட்டா?
ரொம்பத் துள்ளாதடா... நாளைக்குப் பாரு. உனக்கு முன்னால நான் ஸ்கூல்ல இருப்பேன்.
அவசர அவசரமாய்க் குளித்துமுடித்துச் சாப்பிட அமர்ந்தான்.
பதறாம மெதுவாத்தான் சாப்பிடேன்.
பாதியிலே எழுந்து கை கழுவிவிட்டு...
புத்தகப்பையை எடுத்துக்கொண்டு ஓடினான்.
தினமும் இதே கதைதான்... சரியா வயித்துக்குச் சாப்பிடுறதே இல்ல.
பள்ளியில்...
ஏய் மணி... வகுப்பறையில இப்படித்தான் உட்காருவியா? நேரா உட்காரு.
உட்கார்ற இடத்துல கட்டி சார்.
அது சரி... சும்மாவே வாரத்துல மூணு நாள் வயித்துவலி, வாந்திபேதின்னு லீவு போடுவே... அதுல இதுவேறயா? சரி சரி... உட்கார்.



மாலையில், பள்ளி முடிந்து திரும்பும்போது உடற்கல்வி ஆசிரியர் அழைத்தார்.
ஏ மணி... இங்க வா. உடம்புக்கு என்ன? சரியா சாப்பிட மாட்டேங்கிறியாமே? உங்க அப்பா கம்ப்ளெயின்ட் பண்றார்.
ஏன் தினமும் லேட்டா வர்றே? என்ன பிரச்சினை...
அதெல்லாம் இல்ல சார். காலையில எழுந்து, ஆத்தங்கரைக்குப் போயிட்டு வர்றதால லேட்டாயுடுது.
ஏன்... உங்க வீட்ல கழிப்பறை இல்லையா?
உண்மையைப் போட்டு உடைத்தான் சுந்தர்.
அதெல்லாம் இருக்கு சார். ஆனா மணிக்குதான் கழிப்பறை பயன்படுத்துறதே பிடிக்காதே!
அப்படியா மணி... ஏன்?
சார், அதெல்லாம் நடக்கமுடியாத வயசானவங்களுக்குத்தான் சரிப்படும். எனக்கு...
இவனுக்கு இயற்கையா காட்டுப்பக்கம் போறதுதான் பிடிக்குமாம் சார்.
மணியின் அறியாமையை எண்ணிச் சிரித்தார் ஆசிரியர்.
அட அறிவுக் கொழுந்தே... இதுதான் உன் பிரச்சினையா? நல்லாக் கேட்டுக்கோ மணி. கழிப்பறையைப் பயன்படுத்துறதுதான் வசதி, நேரம் மிச்சம், ஆரோக்கியமும்கூட.
திறந்தவெளியில மலம் கழிச்சா... குடற்புழு தொற்று மட்டுமில்லாம, பல நோய்த்தொற்றுகள் உருவாகும்.
உனக்கு அடிக்கடி வயித்துவலி, வாந்திபேதி, புட்டத்துல கட்டி வர்றதுக்கு இதுதான் காரணம். புரிஞ்சிக்கோ.
ஓ... இப்பப் புரியுது சார்.
இனிமே நான் கழிப்பறையைத்தான் பயன்படுத்துவேன்.
மனம் திருந்திய மணியை மகிழ்ச்சியுடன் பார்த்தார் ஆசிரியர்.
மத்தவங்களுக்கும் சொல்லுவேன்.
வெரி குட்!

மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 28.06.2018 முதல் 30.06.2018 வரை சுகாதார ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

ஊரகப் பகுதிகளில் திறம்பட பணியாற்றி வரும் சுகாதார களப்பணி ஊக்குநர்களுக்கு சுகாதார களப் பணியில் திறன்பாட்டை அதிகரிக்க மூன்று நாள் பயிற்சி 28.06.2018 முதல் 30.06.2018 வரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங் களிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 16 சுகாதார ஊக்குநர்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ODF-ன் நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதி செய்வது மற்றும் அதற்கான உத்திகள் குறித்து சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

கீழ்க்காணும் தலைப்புகளில் சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- கிராமங்களில் இன்றைய ODF நிலையைக் கண்டறிவது
- சுகாதாரம் குறித்த பழக்க வழக்கங்களை மக்களிடையே மேற்பார்வை செய்தல்
- ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதிபடுத்துவது
- சுகாதாரம் குறித்து ஊரகப் பகுதி மக்களின் மனமாற்றம் மற்றும் அதன் தற்போதைய நிலைகளை ஆய்வு செய்தல்
- கிராம வரைபடங்கள் மூலம் ODF நிலையை சரிபார்த்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம் மற்றும் யுனிசெஃப் நிறுவனம் இணைந்து நடத்திய இந்த பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இந்தப் பயிற்சியில் களப்பணி மூலமாகவும், செயல்முறை விளக்கம் மூலமாகவும் ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் ஓய்வு பெற்ற இணை இயக்குநர் / ஆலோசகர், CCDU திரு. ராமசாமி, கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. நரசிம்மன், கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் திரு. அய்யப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக இந்தப் பயிற்சியின் துவக்க விழாவில் பங்கேற்று, சுகாதார ஊக்குநர்களுக்கு உத்வேகம் அளித்தனர். ■

களப்பணியின் குரல்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஒன்றியம், கீழன்பீல் ஊராட்சி, பருத்திக்கால் கிராமத்தில் சமூக கண்காணிப்பு வரைபடம் வரையப்பட்டு, கழிப்பறை பயன்பாட்டின் முக்கியத்தும் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. நாள் : 11.06.2018

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியம், சின்னம்பள்ளி ஊராட்சியில் உள்ள கிராம மக்களுக்கு திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் நோய்கள் குறித்து விளக்கப்பட்டது. அத்துடன் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சியாக அறிவித்தல் தொடர்பாக சமூக வரைபடம் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நாள் : 11.06.2018

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விவசாயம் சார் தொழில் செய்யும் கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு கழிப்பறையின் அவசியம் மற்றும் கழிப்பறை பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்தும், கைகழுவும் முறை பற்றியும், திறந்தவெளியில் மலம் கழிப்ப தினால் ஏற்படும் தீமைகள் மற்றும் நோய்கள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நாள் : 12.06.2018

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஊராட்சி ஒன்றியம், மதுரபுரி ஊராட்சி, சித்திரப்பட்ட கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சென்று, அப்பள்ளியில் உள்ள மாணவர்களுக்கு கழிப்பறை பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. பின்னர் மாணவர்களிடம் கழிப்பறை பயன்பாடு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. பின்னர் அப்பகுதி மக்களுக்கும் சமூக கண்காணிப்பு வரைபடம் மூலம் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. நாள் : 12.06.2018

களப்பணியின் குரல்கள்

தருமபுரி மாவட்டம்,
கரிமங்கலம் வட்டாரம்,
அண்ணாமலை கிராமத்தில்
உள்ள கிராம மக்களுக்கு
திறந்தவெளியில் மலம்
கழித்தலற்ற நிலை குறித்தும்
மற்றும் தன் சுத்தம் குறித்த
விழிப்புணர்வும் கிராம வரைபடம்
மூலம் வழங்கப்பட்டது.
நாள் : 13.06.2018

சிவகங்கை மாவட்டத்தில் சுகாதார ஊக்குநர்களுக்கு சமூக சுகாதார அணுகுமுறையிலான புத்தாக்கப் பயிற்சி 19.06.2018 அன்று நடத்தப்பட்டது. 450 சுகாதார ஊக்குநர்கள் இந்தப் பயிற்சியில் பங்கெடுத்துக் கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில்
திருமருகல் மற்றும் கீழ்வேலூர்
வட்டங்களில் உள்ள சுகாதார
ஊக்குநர்களுக்கு
மாவட்ட அளவிலான
புத்தாக்கப் பயிற்சி
அளிக்கப்பட்டது.
நாள் : 26.06.2018

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 13.06.2018 அன்று குறைதீர்ப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தூய்மை பாரத விழிப்புணர்வு முகாமை பார்வையிட்டார்.

களப்பணியின் குரல்கள்

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி, சுசீந்திரம் மற்றும் வானமுட்டி ஊராட்சி ஒன்றியத்தில் குலசேகரம் ஹோமியோபதி மருத்துவ மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகள் கோடை கால சுகாதார முகாம் மூலம் விழிப்புணர்வு மேற்கொண்டனர். நாள் : 14.06.2018

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டாரத்தில் வயலநல்லூர் மற்றும் கரனச்சேரி ஊராட்சியில் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ பல்கலைக் கழகம் மற்றும் ஆர்.எம்.கே. ஆகிய கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் கோடை கால சுகாதார முகாம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். நாள் : 14.06.2018

திருவண்ணாமலை மாவட்டம், மேற்கு ஆரணி வட்டாரத்தில் உள்ள தட்சனூர் பொறியியல் கல்லூரியில் மாவட்ட அளவிலான தலைமை பயிற்சியாளர்களால் அக்கல்லூரி மாணவர்களுக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அது மட்டுமில்லாமல் இரட்டை உறுஞ்சுக் குழி கழிப்பறையின் முக்கியத்துவத்தையும் மற்றும் அதன் நன்மைகளையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நாள் : 18.06.2018

களப்பணியின் குரல்கள்

தேனி மாவட்டத்தில் உள்ள ஊக்குநர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் சமூக அணுகுமுறை தொடர்பான ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 20.06.2018 அன்று நடத்தப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமூக அணுகுமுறை தொடர்பான ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 22.06.2018 அன்று ஊக்குநர்களுக்கு நடத்தப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமூக அணுகுமுறை தொடர்பான ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊக்குநர்களுக்கும் 22.06.2018 அன்று நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம், கல்படி ஊராட்சியில் உள்ள கிருஷ்டியன் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் இணைந்து கோடைகால சுகாதார முகாம் மூலம் விழிப்புணர்வு பேரணி, வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழிப்பறையின் முக்கியத்துவம் மற்றும் சுகாதாரம் குறித்து பெரிய அளவில் பேசப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் கல்லூரி தலைவர், பள்ளி தலைமை ஆசிரியர், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவ – மாணவிகள், முக்கிய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

களப்பணியின் குரல்கள்

கடலூர் மாவட்டத்தில் உள்ள ஓ.பி.ஆர். மெமோரியல் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கோடை கால சுகாதார முகாம் மூலம் சுகாதார விழிப்புணர்வு ஒன்பது கிராமங்களில் மேற்கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாவட்டம் என்ற நிலையை அடைந்ததைத் தொடர்ந்து அதைத் தக்க வைக்க சுகாதார ஊக்குநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாள் : 14.06.2018

300 சுகாதார ஊக்குநர்களுக்கு ODF நிலையை நிலைத்த மற்றும் நீடித்த முறையில் தக்க வைக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

சமூக சுகாதார கண்காணிப்பு வரைபடம் வரையப்பட்டு, ODF நிலை குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

நாள் : 27.06.2018

இடம் : திருவண்ணாமலை

மாணவ – மாணவியர்களுக்கான கல்வி உதவித் தொகைகள்

தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெற்று, உயர் கல்வி படிக்க இடம் கிடைத்துள்ள ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கி உதவிக் கரம் நீட்டுகின்றன அரசு அமைப்புகள். தேவையும் தகுதியும் உள்ள மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கல்வி உதவித் தொகைகளைப் பெறலாம். பல்வேறு வகையான உதவித் தொகைகள் பற்றிய தகவல்கள் இதோ

முதல் தலைமுறைப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை

அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கை மூலம் அட்மிஷன் பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையினை அரசு வழங்கி வருகிறது.

இதுவரை பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொழில் கல்வி படிப்பதை ஊக்குவிக்கும் வகையில் சாதி வேறுபாடின்றி, பெற்றோரின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமலும், இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகையினைப் பெற தங்களது குடும்பத்தில் பட்டதாரிகளே இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில் மாணவர் வசிக்கும் பகுதியின் வருவாய்த் துறையின் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் சான்றிதழ் பெற்று அளிக்க வேண்டும். மாணவர்கள் தொழிற்கல்வி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போதே, குடும்பத்தில் முதன் முதலாக பட்டப் படிப்பு படிக்கும் மாணவர் என்ற சான்றிதழையும், அதற்கான உறுதிமொழிப் பத்திரத்தையும் அளிக்க வேண்டும்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

கல்வி நிறுவனங்களில் படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை வழங்குகிறது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம். கல்வி நிலையத்துடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பட்ட மேற்படிப்பு, மருத்துவம், பொறியியல் பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிறப்பு உயர் கல்வித் தொகை வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெற விரும்பும் மாணவர்கள் தாங்கள் படிக்கும் கல்வி நிறுவனத்தின் மூலமாக அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தின் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு சென்னையில் உள்ள ஆதிதிராவிடர் நல ஆணைய அலுவலகத்தை அணுகலாம்.

சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

பள்ளிகளில் +1, +2, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், நர்சிங் டிப்ளமோ, ஆசிரியர் பயிற்சி டிப்ளமோ, இளநிலைப் பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு, எம்.பில்., பி.எச்.டி போன்ற படிப்புகளை படிக்கும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, (முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மத்தினர், பார்சிக்கள்) மத்திய அரசின் சிறுபான்மையின அமைச்சகம் போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகையை வழங்குகிறது.

இந்தக் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தாங்கள் படித்த பாடத்தின் இறுதித் தேர்வில் 50 சதவீதத்திற்கும் குறையாத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்று வரும் கல்வி உதவித் தொகையைத் தொடர்ந்து பெறுவதற்கு தேர்வில் எந்தப் பாடத்திலும் அரியர்ஸ் இருக்கக் கூடாது. பள்ளி, கல்லூரிக்கு முறையாகத் தொடர்ந்து செல்ல வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவர்கள் வேறு திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற முடியாது.

மேலும் விபரங்களுக்கு **www.tn.gov.in/bcmw/welfschemes_minorities.htm** என்ற இணைய தளத்தைப் பார்க்கவும்

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நன்கு படிக்கக் கூடிய ஏழை மாணவர்களுக்கு மத்திய சிறுபான்மை அமைச்சகம் தனியே சிறப்புக் கல்வி உதவித் தொகையை வழங்குகிறது.

அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும், இளநிலை மற்றும் முதுநிலை, தொழில் மற்றும் தொழில் நுட்பப் படிப்புகளில் படிக்கும் மாணவர்கள் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம். தொழில் அல்லது தொழில் நுட்பப் படிப்புகளில் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே புதியதாக இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்க முடியும். போட்டித் தேர்வுகள் மூலம் இல்லாமல் நேரடியாக அட்மிஷன் பெற்றவர்களும் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

ஆனால் அந்த மாணவர்கள் +2 மற்றும் பட்டப்படிப்பில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். இந்த உதவித் தொகை பெறுபவர்கள் வேறு எந்த உதவித் தொகையும் பெற்றிருக்கக் கூடாது. ஒரு குடும்பத்தில் இரண்டு மாணவர்களுக்கு மட்டுமே இந்த உதவித் தொகை வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு **www.minorityaffairs.gov.in**என்ற இணைய தளத்தைப் பார்க்கவும்

மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை

மாற்றுத் திறனாளி மாணவர்கள் படிப்பதற்கு மத்திய சமூக நீதி அமைச்சகம் கல்வி உதவித் தொகையை வழங்குகிறது. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டு கார்ப்பரேஷன் மூலம் இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொழில் படிப்புகள், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு டிரஸ்ட் பண்ட் ஸ்காலர்ஷிப் திட்டத்தின் கீழ் கல்வி உதவி வழங்கப்படுகிறது. அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உள்ள கல்விக் கட்டணம் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

அத்துடன் மாணவர்களின் பராமரிப்புச் செலவு மற்றும் ஸ்டேஷனரி செலவு போன்றவைகளுக்காகவும் உதவித் தொகை வழங்கப்படும். பார்வையற்ற மாணவர்கள் மற்றும் காது கேளாதவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும் நிதியுதவி செய்யப்படும்.

மேலும் விபரங்களுக்கு **www.nhfdc.nci.in** என்ற இணைய தளத்தைப் பார்க்கவும்

அறிவியல் படிப்பு
மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

பிளஸ் 2 வகுப்பில் படித்த திறமையான மாணவர்களை அறிவியல் படிப்புகளின் பக்கம் ஈர்க்கும் வகையில் மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத் துறை இன்ஸ்பையர் **(Innovation in Science Pursuit for Inspired Research – INSPIRE)** என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இயற்கை மற்றும் கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், எர்த் சயின்ஸ் போன்ற அடிப்படை அறிவியல் பாடப் பிரிவுகளில் பி.எஸ்,சி., ஆனர்ஸ், ஒருங்கிணைந்த எம்.எஸ்.ஸி., எம்.எஸ்., படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இன்ஜினியரிங், கம்ப்யூட்டர் சயின்ஸ், அக்ரிகல்சுரல் சயின்ஸ், எலக்ட்ரானிக் சயின்ஸ், மெடிக்கல் அண்ட் பயோ மெடிக்கல் சயின்ஸ் பாடப் பிரிவு மாணவர்கள் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்க முடியாது.

இந்த உதவித் தொகை பெறத் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். மேலும் இந்த கல்வி உதவித் தொகை பெறும் மாணவர்கள் கோடை காலத்தில் ஆய்வு மையங்களில் திட்டங்களை மேற் கொண்டால் அந்தக் காலத்திற்கு தனியாக உதவித் தொகை வழங்கப்படும். அதே சமயம் மாணவர்களின் கல்வி செயல்பாடுகள் தொடர்ந்து கவனத்தில் கொள்ளப்படும். அதன் அடிப்படையிலேயே இந்த உதவித் தொகை தொடர்ந்து கிடைக்கும்.

மத்திய அல்லது மாநில 12ஆம் வகுப்புக்கான போர்டு தேர்வுகளில் முதல் ஒரு சதவீத இடங்களுக்குள் வரும் மாணவர்கள் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம். இதேபோல் ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வுகளில் முதல் பத்தாயிரம் இடங்களுக்குள் வந்து தற்போது அறிவியல் பாடப் பிரிவுகளை எடுத்து படிக்கும் மாணவர்களும் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

நேஷனல் டேலண்ட் எக்ஸாம், கே.வி.பி.ஒய்., ஜகதீஷ் போஸ் நேஷனல் சயின்ஸ் டேலண்ட் சர்ச் ஸ்காலர்ஸ், சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகளில் வென்றவர்களும், ஐ.ஐ.எஸ்.இ.ஆர்., என்.ஐ.எஸ்.இ.ஆர்., அணுசக்தித் துறை ஆகியவற்றின் சார்பில் நடத்தப்படும் ஒருங்கிணைந்த எம்.எஸ். படிக்கும் மாணவர்களும் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு 17 வயதிலிருந்து 22 வயதுக்குள் இருக்க வேண்டும்.

இன்ஸ்பயர் ஸ்காலர்ஷிப்புக்காக அறிவியல் தொழில்நுட்பத் துறையின் இணையதளத்தில் விண்ணப்ப மாதிரியை டவுன்லோடு செய்து கொள்ளலாம். உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பங்களைத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது ஆன்லைன் மூலமும் அனுப்பலாம். ■



மேலும் விபரங்களுக்கு **www.inspire-dst.gov.in** என்ற இணைய தளத்தைப் பார்க்கவும்

சர்வதேச இளைஞர்கள் தினம் (ஆகஸ்ட் 12)

ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியை சர்வதேச இளைஞர்கள் தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது. அதன்படி 2000ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியன்று சர்வதேச இளைஞர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உலக சமூகத்தில் இளைஞர்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதும், தத்தமது சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் வகையில் அவர்களது செயல்பாடுகளை ஊக்குவிப்பதும் சர்வதேச இளைஞர்கள் தினத்தைக் கடைப்பிடிப்பதன் நோக்கமாகும்.

15 வயது முதல் 24 வயது வரையிலான பிரிவினரை இளைஞர்கள் என்று ஐ.நா. சபை வலியுறுத்துகிறது. உலக மக்கள் தொகையில் இந்தப் பிரிவினர் கணிச மான அளவில் உள்ளனர். வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

தேசிய விளையாட்டு தினம் (ஆகஸ்ட் 29)

நம் இந்திய நாட்டுக்காக ஹாக்கி விளையாடிய திரு. தயான்சந்த் என்பவரின் பிறந்த தினமான ஆகஸ்ட் 29ஆம் தேதியே தேசிய விளையாட்டு தினமாக நம் நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உத்திரபிரதேச மாநிலம், அலகாபாத் நகரில் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி திரு. தயான்சந்த் பிறந்தார். இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வந்த இவரின் தந்தையார், இராணுவ ஹாக்கி அணிக்காக விளையாடியிருக்கிறார். 1922ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த திரு. தயான்சந்தும் இராணுவ ஹாக்கி அணியில் விளையாடியிருக்கிறார். பின்னர் 1934ஆம் ஆண்டு இந்திய ஹாக்கி அணியின் கேப்டனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இவரது தலைமையில் இந்திய ஹாக்கி அணி, 1928 (ஆம்ஸ்டர்டாம்), 1932 (லாஸ் ஏஞ்சல்ஸ்), 1936 (பெர்லின்) ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றது. ஹாக்கி விளையாட்டில் 1000 கோல்களுக்கு மேல் அடித்த இவருக்கு 1956ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. ஹாக்கி வீரர் ஒருவர் இந்த விருதைப் பெருவது இதுவே முதல் முறை. இவர் 1952ஆம் ஆண்டு 'கோல்' என்ற பெயரில் சுய சரிதை எழுதினார். பல்வேறு சிறப்புகளையும் பெற்ற திரு. தயான்சந்த், 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் தேதி மறைந்தார். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

முற்றம் இதழில் வெளியிடப்பட வேண்டிய செய்திகள், வெற்றிக் கதைகள் ஆகியவற்றை பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் முற்றம் இதழிற்கு அனுப்பி வைக்கவும். மேலும் புகைப்படங்களை தெளிவாகவும், நல்ல தரத்துடனும் அனுப்பவும். செல்போனில் எடுக்கப்படும் புகைப்படங்கள், வாட்ஸ்அப்பில் அனுப்பப்படும் புகைப்படங்கள் தெளிவாக இல்லாமல் இருப்பதால் அவற்றை அனுப்புவதை தவிர்க்கவும். புகைப்பட கருவியில் படங்களை எடுத்து அனுப்பவும். - ஆசிரியர், முற்றம் மாத இதழ்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

- ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

இ – சேவை மையமும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும்

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட சுய உதவிக் குழு கூட்டமைப்புகளில் ஒன்று கோட்டை குப்பம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகும். இந்தக் கூட்டமைப்பில் பல திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தாலும், இதன் நிர்வாகிகள் தம் பகுதி வாழ் மக்களுக்கு, புதுவிதமாக ஏதாவது செய்ய வேண்டும் என முடிவெடுத்தனர். அதன் விளைவாக இ–சேவை மையம் ஒன்றைத் தொடங்கி மக்களுக்குத் தேவைப்படுகின்ற சான்றிதழ்களை கூட்டமைப்பின் மூலம் எளிதாக பெற்றுத் தர வேண்டும் என்பது அவர்கள் எண்ணமாகும்.

கடந்த 05.03.2016 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் முன்னிலையில் இ–சேவை பயிற்சியில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து இ–சேவை மையத் திற்கான நுழைவு அங்கீகாரம் மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றைப் பெற்று முதன் முறையாக கூட்டமைப்பின் மூலம் 16.03.2016 அன்று முதல் சான்றிதழ்கள் பெற விண்ணப்பிக்கப்பட்டது. மக்களிர் நம்பிக்கையின்மை மற்றும் தகவல் குறைபாடுகள் காரணமாக சான்றிதழ்கள் குறைவாகவே வாங்கிக் கொடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர் ஆகியோர், பள்ளிகள், செயற்குழு உறுப்பினர் கூட்டம், அரையாண்டுத் திட்டமிடல் மற்றும் பொதுக்குழுக் கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு இ–சேவை சிறப்பம்சங்களை எடுத்துரைத்தார்.

இதன்பின் மக்களின் வருகை அதிகரித்தது. ஏனெனில் எந்த சான்றிதழ் பெற வேண்டுமென்றாலும் 20 கி. மீ. தொலைவிலுள்ள பொன்னேரி தாலுக்கா அலு வலகத்திற்கு அலைந்து சான்றிதழ் பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. கூட்டமைப்பின் இ–சேவை மூலமாக சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை பெற்றுத் தரப்படுகிறது.

இக்கூட்டமைப்பின் மூலமாக சாதிச் சான்றிதழ் 209, வருமான சான்றிதழ் 170 மற்றும் இருப்பிடச் சான்றிதழ் 80 என மொத்தம் 459 சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன. இந்த இ–சேவை மையம் மூலமாக 4 ஊராட்சிகள் மற்றும் சுமார் 30 குக்கிராமங்களில் உள்ள மக்கள் பயன் பெற்றுள்ளனர். இதுமட்டுமின்றி இந்த சேவை மையத்தினால் கூட்டமைப்பிற்கு மாதத்திற்கு ரூ. 3,000/–க்கு மேல் வருவாய் கிடைக்கிறது. ■

ஜீவரத்தினம் மீனவர் முன்னேற்ற சங்கம் – மீனவர் ஒற்றுமைக்கு ஓர் புதிய அமைப்பு

திருவள்ளூர் மாவட்டம், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சியில் உள்ள வைரவன் குப்பம் கிராமத்தில் 45 மீனவர்கள் ஒன்றிணைந்து தங்கள் வாழ்வாதாரத்தில் முன்னேற்றமடைந்திட, கடந்த 28.03.2017 அன்று ஜீவரத்தினம் மீனவர் முன்னேற்ற சங்கத்தினை உருவாக்கி, மாவட்ட மீனவர் முன்னேற்ற சங்கங்களின் சம்மேளனத்தின் வழி முறையாக பதிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக ஆர். துரை என்பவர் செயல்பட்டு வருகிறார். ஜீவரத்தினம் மீனவர் முன்னேற்ற சங்கம், மாவட்ட மீனவர் சம்மேளனம் மற்றும் மாவட்ட செயலாக்க அலுவலகம் ஆகிய மூன்று நிறுவனங்களும் ஒரு முக்கூட்டு ஒப்பந்தத்தினை மேற்கொண்டனர்.

முக்கூட்டு ஒப்பந்தத்தின் வழிமுறைகளின்படி 2017–2018ஆம் நிதியாண்டில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் ஜீவரத்தினம் மீனவர் முன்னேற்ற சங்கத்திற்கு அலுவலக கட்டிடம் ரூ. 8,27,000/– மதிப்பீட்டில் 12.06.2018ல் கட்டுமானப் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு, சங்கத்திற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடம், சங்க உறுப்பினர்கள் பிடிக்கும் மீன்களை நல்ல விலைக்கு விற்கவும், தங்கள் பகுதியினை சார்ந்த மீனவ மக்களின் முன்னேற்றத்திற்காக திட்டங்களை செயலாக்கத்திற்கு கொண்டு வரவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் அதை ஏற்படுத்தித் தந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு ஜீவரத்தினம் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். ■

குறிஞ்சி கூட்டுப் பொறுப்புக் குழு

காஞ்சிபுரம் மாவட்டம், எடையூர் ஊராட்சியில் 13.07.2017 ஆலியப்பன் முனுசாமி குழுவை சார்ந்த சங்கீதா, பவானி, திலகவதி, சத்தியபாமா மற்றும் மாலா ஆகியோர் கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து மீன் வியாபாரம் செய்யும் தொழிலை ஆரம்பித்தனர். தங்கள் தொழில் குறித்து கூறும்போது, “எங்களுடைய கணவர்கள் மற்றவர்களுடைய படகுகளில் கூலிக்குச் சென்று மீன்பிடி தொழிலை செய்கிறார்கள். இதனால் போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தோம். எடையூர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து கடன் பெறலாம் என்பதை அறிந்தோம்.

எங்களுடைய கணவர்களுக்கு பைபர் படகு வாங்கிக் கொடுத்தால் போதிய வருமானம் பெறலாம் என்பதால், நாங்கள் 5 பேரும் இணைந்து குறிஞ்சி கூட்டுப் பொறுப்புக் குழு என்ற பெயரில் பல்லவன் வங்கியில் கணக்கை ஆரம்பித்தோம். பல்லவன் வங்கி கடன் ரூ. 3,80,000/–ம், எங்கள் பங்குத் தொகை ரூ. 20,000/– என மொத்தம் ரூ. 4 இலட்சத்தை முதலீடாகக் கொண்டு, பைபர் படகு, இஞ்சின் மற்றும் வலைகள் வாங்கி தொழிலை ஆரம்பித்தோம். இப்போது எங்கள் கணவர்கள் கூலிக்கு செல்லாமல் கடல் தொழிலுக்குச் சென்று வருமானம் ஈட்டி வருகின்றனர்.

வங்கிக் கடனை மாதம் தவறாமல் ரூ. 20,000/– வீதம் செலுத்தி வருகிறோம். இதுவரை கடன் மற்றும் அசல் தொகையாக மொத்தம் ரூ. 2,14,948/– செலுத்தியுள்ளோம். ரூ. 1,82,000/– இலாபம் ஈட்டி உள்ளோம். எங்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவும், எங்களை முதலாளிகளாக உயர்த்தவும் உதவி செய்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டனர். ■

காப்பீடு – ஒரு பயனாளியின் அனுபவம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் காப்பீடு திட்டத்தின் கீழ் இணைந்து பயன் பெற்ற பயனாளியான திருமதி. பத்மாவதி, க/பெ. தாமோதரன் என்பவர் தன் அனுபவத்தைக் கூறுகையில், “நான் இராஜக்காமங்கலம் வள ஆதார மையத்திற்குட்பட்ட இராஜக்காமங்கலம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். இராஜக்காமங்கலம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக செயல்பட்டு வருகிறேன். மருத்துவக் காப்பீட்டில் எங்கள் குடும்பத்திற்கு பிரீமியாக ரூ. 313/– செலுத்தி காப்பீட்டில் இணைந்திருந்தேன்.

என் கணவர் கடந்த 14.09.2017 அன்று வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அதன் காரண மாக நாகர்கோவில் கணேசமணி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து எனக்கு இழப்பீடு தொகையாக United India Insurance நிறுவனம் மூலம் ரூ. 5477/– கிடைத்தது. மேலும், இந்த இழப்பீடு தொகை சரியான தருணத்தில் எனக்குக் கிடைத்ததால் எனக்கும், என் குடும்பத்திற்கும் பெரும் உதவியாக இருந்தது.

நான் இந்தத் திட்டத்தில் காப்பீடு செய்யாமல் இருந்திருந்தால் என் கணவருக்கு தக்க சமயத்தில் மருத்துவம் செய்ய முடியாமல் அவதிப்பட்டிருப்பேன். இராஜக்காமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் மருத்துவக் காப்பீட்டை அறிமுகப்படுத்தி விழிப்புணர்வு பயிற்சி வழங்கி, மிகக் குறைந்த பிரீமியம் செலுத்தி அதிகப் பயன் பெறச் செய்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலுவலர்களுக்கும், காப்பீடு நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார். ■

மகளிர் தொழில் முனைவோராகி வென்ற கதை

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிதி உதவி வழங்கி, மக்களை நிலைத்த தொழில் மேற்கொள்ள வைத்து வாழ்வாதார வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் உன்னதப் பணியினை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மேற்கொண்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், ஆலப்பாக்கம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. நாகலட்சுமி தொழில் வளர்ச்சிக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செய்துள்ள உதவி குறித்து கூறும் போது, "மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், ஆலப்பாக்கம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஸ்ரீ முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய கணவர் காசியப்பன் ஓட்டுனராக வேலை செய்து வருகிறார்.

எங்கள் பகுதியில் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடன் உதவி பெற்று நானும், திருமதி. வசந்தா என்பவரும் சேர்ந்து 20 செண்ட் பரப்பளவிலான இடத்தைக் குத்தகைக்கு எடுத்து அதில் ஹாலோ பிளாக் தயாரிப்பு தொழில் செய்து வருகிறோம். இந்தத் தொழில் செய்வதற்கு எங்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் குறுந்தொழில் மேம்பாட்டின் கீழ் வட்டியில்லா கடனாக ரூ. 2,90,000/– வழங்கப்பட்டது. பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ. 48,000/– செலுத்தப்பட்டு, மொத்தம் ரூ. 3,38,000/– மதிப்பீட்டில் 13.12.2012ல் இத்தொழிலைத் துவங்கி இன்று வரை சிறப்பாக செய்து வருகிறோம்.

ஹாலோ பிளாக் தொழிலில் இதுநாள் வரை சுமார் 4,64,000 கற்கள் விற்பனை செய்ததன் மூலம் எங்களுக்குக் கிடைத்த இலாபத்தில் ரூ. 2,90,000/– கடனைத் திரும்பச் செலுத்தியுள்ளோம். எனக்குக் கிடைத்த இலாபத் தொகையில் கற்களை ஏற்றிச் செல்வதற்காக டிராக்டர் ஒன்றை வாங்கியுள்ளோம். என்னுடன் இணைந்து ஹாலோ பிளாக் தொழிலில் ஈடுபட்டு வரும் பயனாளியான திருமதி. வசந்தா, தனக்குக் கிடைத்த இலாபத் தொகையில் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்துக் கொண்டு இருக்கிறார்.

மேலும் இத்தொழிலை மேம்படுத்த கடன் உதவி தேவைப்பட்டதால் 5 பயனாளிகளை இணைத்து கூட்டு வள மைய பணியாளர்கள் மூலம் அனுமந்தை பல்லவன் கிராம வங்கி மேலாளரைச் சந்தித்தோம். அவர்கள் இத்தொழிலை பார்வையிட்டு, நல்ல முறையில் செயல்படுகிறது என்பதை அறிந்த பின்னர் கூட்டு பொறுப்புக் குழு மூலம் பல்லவன் கிராம வங்கியில் ரூ. 3,50,000/– 12% வட்டியுடன் கடன் உதவி வழங்கி, எங்கள் தொழில் மேலும் வளர்ச்சியடைய ஊக்கப்படுத்தினர்.

ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் ஹாலோ பிளாக் தொழில் துவங்க எங்களுக்கு நிதி உதவி அளித்து, எங்களைத் தொழில் முனைவோர்களாக்கிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை வாழ்த்தி, எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றனர். ■

தடை செய்யப்பட்ட மீன் வலைகள் குறித்து விழிப்புணர்வு முகாம்

கடலூர் மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் உதவியுடன் செயல் படுத்தப்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டமும், மாவட்ட மீன்வளத்துறையும் இணைந்து 11 இடங்களில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தின.

28.06.2018 அன்று சாமியார்பேட்டை கிராமத்தில் வலை பின்னும் கூடத்தில் காலை 11 மணியளவில் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் கிராம மீனவ தலைவர், செயலாளர் உட்பட 40 உறுப்பினர்களும், மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த 6 பெண்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தலைமை ஏற்று பேசிய மீன் வள இணை இயக்குநர் அரசு தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள், சுகாதார முறையில் மீன் விற்பனை செய்வது குறித்து பேசினார். இதில் இரட்டைமடி, சுருக்கு வலைகளை தடை செய்ய வேண்டி இந்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது எனவும், அதிகத் திறன் கொண்ட மோட்டார் இயந்திரம் பயன்படுத்த உள்ள தடை குறித்தும் பேசினார்கள்.

தலைவர், மக்கள் உட்பட அனைவரும் எங்கள் ஊர் கட்டுப்பாடோடு செயல்படுவதால், நாங்கள் இவ்வகை வலைகளை பயன்படுத்துவதில்லை எனவும், வெளியூரிலிருந்து இவ்வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பவர்களை தடுத்து நிறுத்துமாறும் கேட்டுக் கொண்டனர். கடலூர் மாவட்டத்தில் இம்மாதிரி வலைகளை முழுமையாகத் தடை செய்ய சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. 60 நாட்களில் அரசு முழு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாக்க அலுவலர் திட்ட செயல்பாடுகளுடன் காப்பீடு திட்டம் பற்றி எடுத்துக் கூறினார். மோட்டார் இயந்திரம் பொருந்திய படகுகளுக்கு காப்பீடு செய்ய படகின் மதிப்பில் 50% இழப்பீடு தொகையாக வழங்கப்படும், காப்பீடு செய்யப்படும் படகு மீன் வளத் துறையில் பதிவு செய்திருக்க வேண்டும், FARMS உறுப்பினர்கள் பார்வையிட்டு மதிப்பீட்டின்படி இழப்பீடுத் தொகை வழங்கப்படும் என காப்பீடு செயலாக்கம் குறித்து மாவட்ட செயலாக்க அலுவலர் எடுத்துரைத்தார். கடலோர காவல் படையின் பிரதிநிதி பேசுகையில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு பற்றி எடுத்துரைத்தார். மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோரிடம் அடையாள அட்டை கையில் வைத்திருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ■

கூட்டுப் பொறுப்புக் குழு கடனும், மகளிர் மேம்பாடும்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் முட்டம் வள ஆதார மையத்திற்குட்பட்ட சைமன் காலனி ஊராட்சியில் வசிக்கும் திருமதி. சஜிலா, திருமதி. பிரின்சிமோள், திருமதி. ரெஜின் ராணி, திருமதி. சகாய சஸ்பினி மற்றும் தி ருமதி. ஜென்சி ஆகியோர் தங்களின் வெற்றி குறித்து குறிப்பிடும்போது, "நாங்கள் ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து அழகு நிலையம் (Beauty Parlour) வைத்து நடத்தி வருகின்றோம்.

இந்தத் தொழிலை செய்ய முடிவு செய்வதற்கு முன்பு இத்தொழிலை பற்றியும், கடைகள் நடத்துவது பற்றிய விபரங்களை இதனைப் பற்றி தெரிந்த நபரிடம் விசாரித்து தெரிந்து கொண்டோம். இதை செய்வதற்கு முதலீடு அதிகம் தேவைப்பட்டதால் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு மூலமாகவும், சுய உதவிக் குழுவின் மூலமாகவும் கடன் வசதி பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டோம்.

பின்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பரிந்துரையின் பேரில் இந்தியன் வங்கியின் மூலமாகத் தொழில் தொடங்க கடன் வசதி பெற்றுத் தரப்பட்டது. அதில் எங்களின் பங்களிப்பாக ரூ. 12,500/-ம், 16.02.2018 அன்று இந்தியன் வங்கி மூலம் பெற்ற தொகை ரூ. 2,37,500/-ம் சேர்த்து, இத்தொழிலுக்கு மொத்தமாக ரூ. 2,50,000/- பெற்று இந்தத் தொழிலைச் செய்ய துவங்கினோம். நாங்கள் இதுவரை 3 தவணைகளாக ரூ. 30,000/- கடன் திரும்ப செலுத்தியுள்ளோம். இத்தொழிலில் மாதம் ரூ. 8,000/- இலாபம் கிடைத்து வருகிறது. மேலும் அதிக இலாபம் பெற முயற்சித்து வருகிறோம்.

இந்தத் தொழிலை செய்வதற்கு முயற்சி மேற்கொள்வதற்கு முன்பு எங்களது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருந்தது. ஆனால் தற்போது எங்களுடைய பொருளாதார நிலை சிறிது சிறிதாக உயர்ந்துள்ளது. மேலும் பொருளாதாரத்தில் உயர இன்னும் அதிகம் பாடுபடுவோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

அழகு நிலையம் தொழிலை ஆரம்பித்து எங்கள் வாழ்க்கையை அழகுப்படுத்தி யது மட்டுமல்லாமல் எங்கள் கடைக்கு வரும் அனைவரையும் அழகுபடுத்துகிறோம். எங்களது விடாமுயற்சியினாலும், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத் தினாலும் கிடைத்த இந்த வெற்றியால் எங்களது தொழிலை மையமாகக் கொண்ட எங்கள் கிராமத்தில் நாங்கள் ஒரு முன் உதாரணமாக தற்போது காணப்படுகிறோம். இதனால் எங்கள் மனதில் தன்னம்பிக்கை பெற்று, பிறரிடம் கைநீட்டி தொழிலாளியாக வாழ்ந்து வந்த நாங்கள் இன்று ஒரு முதலாளி போன்று எங்கள் வாழ்க்கை மாறி பொருளாதாரத்திலும் மேம்பாடு அடைந்துள்ளோம்" என்று குறிப்பிட்டனர். ■

திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மீன் பிடித்தலில் உள்ள நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து விழிப்புணர்வு முகாம்

திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் மீன் வளத்துறை சார்பில் மீன் பிடித்தலில் உள்ள நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து விழிப்புணர்வு முகாம் 26.06.2018 முதல் 29.06.2018 வரை மூன்று தினங்கள் நடத்தப்பட்டது.

விழிப்புணர்வு முகாமில் திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட செயலாக்க அலுவலர் திரு. எம். செல்வம், திருவாரூர் மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. ஜெயராஜ், தஞ்சாவூர் மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. சின்னக்குப்பன், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் திரு. இரா. பாலசுப்ரமணியன், நிறுவன வளர்ச்சி அலுவலர் திரு. ஜெயபாரத், சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. வி. துர்க்கா செல்வன், கடலோரக் காவல் படை ஆய்வாளர் திரு. சுபாஷ் சந்திரபோஸ், மீன் விற்பனை சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. சரவணன், மீனவர் சங்கங்களின் தலைவர் மற்றும் மீனவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் எல்லைத் தாண்டி மீன் பிடிக்கக் கூடாது, சுருக்கு மடி, இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தக் கூடாது, வெடி பொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடிக்கக் கூடாது, மீன்பிடி துறைமுகம், இறங்கு தளம் ஆகியவற்றை சுத்தமாகவும், சுகாதார மாகவும் வைத்திருக்க வேண்டும், கடல் குதிரை, கடல் அட்டை, பால் சுறா போன்ற மீன்களை பிடிக்கக் கூடாது, தடை காலத்தில் மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது, வானிலை அறிவிப்புகளை மீறி மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லக் கூடாது போன்ற கருத்துக்கள் அனைத்துத் துறை அலுவலர்களால் முன்வைக்கப்பட்டது. அனைத்துப் படகுகளும் கண்டிப்பாக காப்பீடு செய்திருக்க வேண்டும் எனவும், அடையாள அட்டை, படகு பதிவு புத்தகம், மிதவை அட்டை போன்ற உயிர் காக்கும் கருவிகள், முதலுதவிப் பெட்டி, தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றையும் உடன் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ■

கடன் மீட்பு நிதி – மீனவர்களை மீட்டெடுக்கும் புதிய முயற்சி

உலகிலேயே சுரங்கத் தொழிலுக்கு அடுத்ததாக மீன் பிடித்தல் தொழில் கடின மானதாக கருதப்படுகிறது. சிரமப்பட்டு பிடித்த மீன்களை மீனவர்கள் கடற்கரையில் உள்ள மீன் வியாபாரிகளிடம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட சிறு கடனுக்காக வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்கும் நிலைக்கு ஆளாகின்றார்கள். உண்மையான சந்தை விலையை விட குறைவான விலைக்கு மீனவர்களிடம் இருந்து மீன்களை வியாபாரிகள் வாங்குகின்றனர்.

இதைக் கருத்தில் கொண்டு பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதிஉதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் மீன் விற்பனை சங்கங்கள் தொடங்கப்பட்டு, அச்சங்க உறுப்பினர்களுக்கு கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டு வருகிறது. அத்தொகையைக் கொண்டு அவர்களுடைய கடனை திரும்ப செலுத்தி விட்டு கடனிலிருந்து விடுதலைப் பெறுகின்றனர்.

ஒவ்வொரு மீன் விற்பனைச் சங்கத்திலும் குறைந்தபட்சம் 40 மீனவர்கள் உறுப்பினராக இருத்தல் வேண்டும். விடுதலைக் கடனாக மீனவர்களுக்கு 20,000 முதல் 50,000 வரை 12% வட்டி வீதத்தில் 36 மாதங்களில் திரும்ப செலுத்தும் வகையில் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை மீன் விற்பனை சங்கத்தில் விற்பனை செய்து, அதிக விலைக்கு விற்று போதிய வருவாயைப் பெறலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் அடைக்கத்தேவன் ஊராட்சியில் ஸ்ரீ பால ஆஞ்சநேயர் மீனவர் முன்னேற்ற சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் மூலம் 46 மீனவர்களுக்கு 12.30 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் பற்றி மீன் விற்பனை சங்கத் தலைவர் திரு. வேலு கூறுகையில், “எங்கள் கிராமத்தில் மீனவர்கள் வியாபாரிகளிடம் கடன் வாங்கியதால், மீனவர்கள் அனைவரும் அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தனர். பிடிக்கும் மீன்களை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்று கடனை அடைக்க இயலாமல் கஷ்டப்பட்டு வந்தோம். சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலுவலர்கள் எங்களிடம் மீன் விற்பனை சங்கத்தில் சேருவதால் கிடைக்கக் கூடிய நன்மைகள் குறித்துத் தெரிவித்தனர். முதலில் மிகவும் தயங்கினோம். உள்ளூர் வியாபாரிகளிடம் இருந்து மீள்வது கடினமாக இருந்தது.

நாங்கள் மீன் விற்பனை சங்கம் அமைத்து பதிவு செய்தோம். தற்போது பெற்ற கடனில் பழைய கடன்களை திருப்பி செலுத்திய பின் சங்கம் மூலம் மீன் விற்பனை செய்து 25 சதவீதம் அதிக இலாபம் பெறுகின்றோம். கடனிலிருந்து மீட்டுத் தந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி” என தெரிவித்தார். ■

புதுக்கோட்டை மாவட்டத்தில் மீனவர்களுக்கு விழிப்புணர்வு முகாம்

புதுக்கோட்டை மாவட்டத்தில், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கடற்கரையை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் வசித்து வரும் மீனவர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் புதுக்குடி மற்றும் கோட்டைப்பட்டிணம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் இப்பகுதி மீனவர்கள் கலந்து கொண்டனர். தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்துவதால் மீன் வளம் பாதிக்கப்படுவது குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதேபோல் மீன்பிடி தளங்களை சுத்தமாக பராமரித்தல் குறித்தும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் போது பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவது மற்றும் வாக்கிடாக்கி (Wireless) கருவிகள் பயன்படுத்துவது தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. மேலும், படகு மற்றும் மோட்டார் இன்சூரன்ஸ் தொடர்பாகவும், மீனவர்களுக்கான இன்சூரன்ஸ் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது. இந்த விழிப்புணர்வு பயிற்சி முகாமில் மீன்வளத்துறை உதவி இயக்குநர், மாவட்ட செயலாக்க அலுவலர், கடலோர பாதுகாப்பு காவல் துறை உதவி ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

மீனவர்களுக்கான ஒருநாள் விழிப்புணர்வு முகாம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன் வளத்துறை மூலம் அனைத்து கடலோர பகுதிகளில் மீனவர்களுக்கான "மீன்பிடி விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்" குறித்த விழிப்புணர்வு முகாம் 25.06.2018 முதல் 30.06.2018 வரை நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு முகாமில் மீன் வளத்துறை அலுவலர்கள், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலுவலர்கள், கடலோர காவல் படை அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், மீனவர் சங்க நிர்வாகிகள், பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் விதமாக மீன்பிடி கலன்களை பதிவு செய்தல், பதிவு சான்று, மீன்பிடி உரிமைச் சான்று பெறுதல், மீன்பிடி படகுகளில் வைத்திருக்க வேண்டிய உயிர் காக்கும் சாதனங்கள், முதலுதவி பெட்டி, தொலைத்தொடர்பு சாதனங்கள், காப்பீடு ஆகியவை குறித்து மீனவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் முக்கிய அம்சமாக தடை செய்யப்பட்ட மீன்பிடி சாதனங்களான சுருக்குமடி, இரட்டை மடி வலைகள் மற்றும் வெடி பொருட்கள் பயன்படுத்துவதால் கடல் மாசுபடுதல், கடல் வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் அழிவுகள், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. தற்பொழுது சுற்றுச்சுழலுக்கு உகந்த மீன்பிடி சாதனங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு, அனைத்து மீனவர்களும் அதனைப் பின்பற்றி மீன்வளம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டது.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மீன்பிடி சாதனங்களுக்கான காப்பீடு மற்றும் இதர காப்பீடுகளின் நன்மைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பேரிடர் காலங்களில் காப்பீட்டின் நன்மை, துரிதமாக காப்பீடு பெறும் வழிமுறைகள், தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் பற்றி விளக்கப்பட்டது.

மேலும், மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களில் மேற்கொள்ள வேண்டிய தூய்மை மற்றும் சுகாதார நடைமுறைகள் பற்றி மீன்வளத்துறை அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். அழிந்து வரும் கடல் உயிரினங்களான கடல் பசு ஆகியவற்றை காப்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. ■

முதலாம் அரையாண்டுத் திட்டமிடல் கருத்தரங்கு – 2018–19

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 2018–2019ம் ஆண்டிற்கான முதலாம் அரையாண்டுத் திட்டமிடல் கருத்தரங்கு நிகழ்ச்சி, தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு ஊராட்சியில் 12.06.2018 அன்று காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி கருத்தரங்கில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இப்பகுதியில் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி வாழ்வாதாரத்தை பெருக்குவது தொடர்பான செயல் திட்டமிடல் மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. வ. சார்லெட் மேரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து உடன்குடி ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தெளிவாக விளக்கிக் கூறினார். வேளாண்மைத் துறை சார்பில் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்த விவரங்களை உடன்குடி உதவி வேளாண்மை அலுவலர் தெரிவித்தார். சமூக நலத்துறை சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து விரிவாக்க அலுவலர் (சமூக நலம்) தெளிவாக விளக்கினார். ஏகம் பவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பேசினார்.

இக்கருத்தரங்கின் மூலம் மீன் பதப்படுத்துதல் மற்றும் பனை ஓலை மூலம் கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றிற்கான வளங்கள் அதிக மாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கு பொது மக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது என ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயலாளர் தெரிவித்தார். கருத்தரங்கில் கலந்து கொண்ட நபர்களுக்கு மதிய உணவும், ஊதிய இழப்பீட்டு தொகையும் வழங்கப்பட்டது. ■

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க ஆண்டு செயல் திட்டம் செயல்படுத்தும் வழிமுறைகள் குறித்து கருப்பொருள் சார்ந்த வல்லுநர்கள் மற்றும் தேசிய அளவிலான வல்லுநர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்



தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் சார்பாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் 2018–2019க்கான ஆண்டு செயல் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் 12.06.2018 மற்றும் 13.06.2018 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகக் கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது. திரு. ஜா. சம்பத், கூடுதல் செயல் இயக்குநர், (திறன் வளர்ப்பு) அவர்கள் இக்கலந்தாய்வுக் கூட்டத்தினை துவக்கி வைத்து, கலந்தாய்வுக் கூட்டத்தின் நோக்கம் குறித்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாநில அளவிலான அலுவலர்களுக்கு தெளிவாக விளக்கிக் கூறினார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றி, தேசிய அளவிலான வல்லுநர்கள் மற்றும் கருப்பொருள் சார்ந்த வல்லுநர்களுடன் கலந்தாய்வு செய்தார்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் நிதி உள்ளாக்கம், சிறப்பு புதிய திட்டங்களான பாலின சமத்துவம், உணவு, சுகாதாரம், ஆரோக்கியம், மகிளா கிஷான் சசக்திகரன் பரியோஜனா (MKSP) மற்றும் ஊரக தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டம் (SVEP) போன்ற திட்டங்களை செயல்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், திட்டத்தினை தொடர் கண்காணிப்பு செய்து, சரியான பாதையில் திட்டம் மக்களை சென்றடையும் வகையில் மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு தேசிய அளவிலான வல்லுநர்கள் மற்றும் கருப்பொருள் சார்ந்த வல்லுநர்களுடன் மாநில இயக்க மேலாண்மை அலகின் அலுவலர்கள் கலந்தாய்வு மேற்கொண்டனர்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் திரு. ராஜன்பாபு (தேசிய வள வல்லுனர், திரு. சுந்தர் (தேசிய அளவிலான வல்லுநர்), டாக்டர். ஈஷா பிரசாத் பகவத், டாக்டர். பி. ஆர். ஜான்சிராணி (தேசிய வள வல்லுநர்) திரு. அர்னாப் போஸ் (தேசிய அளவிலான வல்லுநர்), திரு. எஸ். எஸ். ஜெய்தீப் (தேசிய அளவிலான வல்லுநர்) மற்றும் மாநில இயக்க மேலாண்மை அலகின் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) சென்னை செய்திருந்தது. ■

பீகார் மாநில தேசிய வள மையப் (NRO) பணிகள்

பீகார் மாநிலத்தில் கடந்த பல ஆண்டுகளாக பீகார் ஊரக வாழ்வாதார மேம்பாட்டுச் சங்கம் (BRLPS) சார்பாக ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்காக வறுமை ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

சமூக நிறுவனங்களான சுய உதவிக் குழுக்கள், கிராம அமைப்பு, தொகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மாவட்ட கற்றல் மற்றும் பயிற்சி மையம் ஆகிய சமூக அடிப்படையிலான நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக, தமிழ்நாடு தேசிய வள மையத்துடன் (NRO) கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, 10 மாவட்ட நெறியாளர்களும், ஒரு மாநில நெறியாளரும் பீகார் ஊரக வாழ்வாதார மேம்பாட்டுச் சங்கத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட நெறியாளர்கள் பீகாரில் உள்ள கயா, நாளந்தா, சுபால், மத்தேபுரா, சகஸ்ரா, பூர்ணியா, ரோத்தாஸ், ககரியா, மூசாப்பர்பூர் மற்றும் மதுபாணி ஆகிய பத்து மாவட்டங்களில் பணி செய்து வருகின்றனர்.

மாவட்ட நெறியாளர்கள் மூலம் மாவட்ட கற்றல் மற்றும் பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சி மேலாண்மைக் குழு, கொள்முதல் குழு மற்றும் பணியாளர்கள் மேலாண்மை குழு போன்றவைகளை அமைத்து, அந்த குழுக்களுக்கு போதிய பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி, சிறந்த மக்கள் கற்றல் மற்றும் பயிற்சி மையங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றனர்.

மேலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பயிற்சி மற்றும் கற்றல் மையங்களிலும் மக்களே தங்களின் மக்கள் அமைப்புகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்து, உண்டு உறைவிட பயிற்சி உள்பட அனைத்து விதமான சேவைகளையும் வழங்கி வருகின்றனர். ■

தேசிய வள மையத்தின் மூலம் சிறந்த முறையில் வழிநடத்தி, பீகார் மாநில வாழ்வாதார திட்டப் பணிகளை மிகச் சிறந்த முறையில் மேற்கொண்டு, மக்களை ஒருங்கிணைத்து அனைத்து சேவைகளும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் ஒருங்கிணைந்த மேம்பாடு அடைய வழங்கப்பட்டு வருகின்றது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079. Published from (61,200 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

மாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைத் தேர்ந்தெடுக்க தேர்வுக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான 2013–2014 முதல் 2016–2017 வரையிலான விருதுகளை தேர்வு செய்வதற்காக மாநில அளவிலான தேர்வுக் குழுக் கூட்டம், சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் 20.06.2018 மற்றும் 21.06.2018 ஆகிய தேதிகளில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதில் அனைத்து மாவட்டங்களில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட 90 சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளும், 93 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்குப் பெற்று, குழு மற்றும் கூட்டமைப்புகளின் சிறந்த செயல்பாடுகளைப் பற்றி எடுத்துரைத்தனர். இந்தத் தேர்வுக் குழுக் கூட்டத்தில், தேர்வுக் குழு உறுப்பினர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட திட்ட மேலாளர்களும் கலந்து கொண்டனர். ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

✗ செய்யக்கூடாதவை



திறந்த வெளியில் மலம் கழிக்காதீர்கள்.

நீரை காய்ச்சாமல் பருகாதீர்கள்.

மூடப்படாத உணவை உண்ணாதீர்கள்.

✓ செய்ய வேண்டியவை



மலம் கழிக்க கழிப்பறையை பயன்படுத்துங்கள்.

கைகளை சோப்பால் கழுவுங்கள்.

காலை – இரவு பல் துலக்குங்கள்.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல்நலத்தை காத்திடுவோம்!